**04.06.2025** **அசல் வழக்கு எண்.42/2005** **Starting Time : 03.21 p.m.**

**பி.வா.சா.2 திரு.பெருமாள் த/பெ.இரத்தினப்பிள்ளை**

**சாட்சிய சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கிரயம் வாங்கியதாக சொல்லும் சொத்துக்கள் மாணிக்க பிள்ளைக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் என்றால் சரி தான். அம்மணியம்மாளுக்கு சொந்தமான சொத்துக்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அம்மணியம்மாள் என்பவர் மாணிக்கப்பிள்ளையின் மனைவியாவார். மேற்படி மாணிக்க பிள்ளை, அம்மணியம்மாள் இருவரும் யாதவர் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். யாதவர் சமுதாய வழக்கப்படி அம்மணியம்மாள் மாணிக்க பிள்ளைக்கு விவாகரத்து எழுதிக்கொடுத்துவிட்டு பிரிந்து சென்றுவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அம்மணியம்மாளுக்கு குழந்தைகள் யாரேனும் இருக்கிறார்களா என்றால் இல்லை. அம்மணியம்மாள் அவர் கணவருடன் எவ்வளவு நாட்கள் ஒன்றாக சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள் என்றால் 40 வருடங்கள் இருக்கும். அம்மணியம்மாளுக்கு எவ்வளவு வயது இருக்கும் என்றால் 76 வயது இருக்கும். அம்மணியம்மாள் அவருடைய சொந்த ஊருக்கு சென்று எவ்வளவு ஆண்டுகள் இருக்கும் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அம்மணியம்மாள் அவரது கணவர் உடன் 40 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்து வந்தார் என்பதற்கு ஆதாரம் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். அம்மணியம்மாள் விசாரணைக்காக சாட்சியமளிக்க நீதிமன்றத்திற்கு வந்தார் என்றால் வந்தார். நான் சொல்வது தவறு என்றும், அம்மணியம்மாள் நீதிமன்றத்திற்கு வந்தார், ஆனால் சாட்சியமளிக்காமல் சென்றுவிட்டார் என்று கூறினால் அது சரியல்ல. நான் தான் அவரை அழைத்து வந்தேன். குறுக்கு விசாரணைக்காக அம்மணியம்மாள் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வந்தாரா என்றும், அவர் என்ன சாட்சியமளித்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் அம்மணியம்மாள் நீதிமன்றத்திற்கு வந்தார். வழக்கு சொத்தின் ஒரு பாகத்தை யாருக்கு விற்பனை செய்தாய் என்று கேட்டார்கள், அதற்கு அம்மணியம்மாள் இரத்தினப்பிள்ளைக்கு விற்பனை செய்தேன் என்று கூறினார். நான் சொல்வது தவறு என்றும், அம்மணியம்மாள் நீதிமன்றத்திற்கு சாட்சியமளிக்க வராததால் அவருடைய சாட்சியம் நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அம்மணியம்மாள் ஏறக்குறைய 30 ஆண்டுகளாக கணவனால் கைவிடப்பட்டவர் என்று உதவி தொகை பெற்று வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அம்மணியம்மாள் விவாகரத்து செய்தபிறகு மாணிக்கப்பிள்ளை 1ஆம்

வாதியை இரண்டாவதாக திருமணம் செய்துக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் நம்பேடு மேட்டுக்குடிசையில் வசித்து வருகிறேன். 1ஆம் வாதியும், மாணிக்கபிள்ளையும் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்றால் எனக்கு தெரியாது. அம்மணியம்மாள் மேல்நெமிலி ஊரை சேர்ந்தவர். அம்மணியம்மாள் மேல்நெமிலியை சேர்ந்தவர், ஆனால் மாணிக்கப்பிள்ளை எந்த ஊரை சேர்ந்தவர் என்று எனக்கு தெரியாது என்றால் மாணிக்கபிள்ளை மேல்நெமிலியை சேர்ந்தவர். மாணிக்கப்பிள்ளை எனக்கு மாமா உறவு முறை ஆவார். மாணிக்கப்பிள்ளைக்கும் 1ம் வாதிக்கும் திருமணம் பத்திரிக்கை அடித்து ஊராரின் முன்னிலையில் நடைபெற்றது என்றால் எனக்கு தெரியாது. 1ஆம் வாதி மாணிக்கப்பிள்ளைக்கு உடன் பிறந்த சகோதரியின் மகளாவார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மாணிக்கப்பிள்ளைக்கும் 1ம் வாதிக்கும் பிறந்த குழந்தைகள் தான் 2 முதல் 6 வரையான வாதிகள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கள் மற்றும் எனது தந்தையார் கிரயம் பெற்ற சொத்துக்கள் உட்பட அனைத்து சொத்துக்களுக்கும் மாணிக்க பிள்ளை காலமான பின்னிட்டு வாதிகளின் பெயரில் தான் பட்டா, சிட்டா, அடங்கல், அ பதிவேடு ஆகிய வருவாய் துறை ஆவணங்கள் அனைத்தும் உள்ளன என்றால் அம்மணியம்மாள் பெயரில் இருந்து வாதிகள் பெயருக்கு வந்துவிட்டது என்று சாட்சி கூறிவிட்டு, (அது பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார்.) இன்றைய தேதியில் அம்மணியம்மாள் பெயரில் தாவா சொத்துக்கள் சம்பந்தமாக பட்டா உள்ளதா என்றால் உள்ளது. அம்மணியம்மாள் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். வழக்கு சொத்துக்கள் நம்பேடு கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்து இருக்கும் இடத்திற்கும் வாதிகள் வீட்டிற்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் ஒரு கிலோ மீட்டர் தூரம் இருக்கும். இன்றைய தேதி வரையில் வாதிகள் தான் தாவா சொத்துக்களில் பயிர் செய்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்துக்களின் பேரில் அரசாங்கத்தில் அடமானம் வைத்து கடன் பெற்றும் அடைத்தும் வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனார் கிரயம் பெற்ற சொத்துக்கள் உட்பட மத்திய அரசாங்கம் மானியம் கொடுத்து வருகிறது, அதை ஏதும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. வாதிகள் இன்றைய தேதி வரையில் மத்திய அரசாங்கத்தின் விவசாய மானியத்தை தாவா சொத்துக்களின் பேரில் பெற்று வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அம்மணியம்மாள் மாணிக்கபிள்ளையின் மீது நீதிமன்றத்தில் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்து ஜீவனாம்ச தொகை பெற்று வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை அம்மணியம்மாளிடம் எத்தனை

அளவு விஸ்தீரணம் உள்ள சொத்துக்களை எந்த சர்வே நெம்பரில் கிரயம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். மேற்படி சொத்துக்களை எனது தந்தை எந்த தேதியில் கிரயம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 24.03.1994ஆம் தேதி சர்வே எண்.28/1பி,1டி,3சி ஆகிய மூன்று சொத்துக்களை எனது அப்பா கிரயம் பெற்றார் என்றால் சரிதான். இந்த வழக்கு 1994ஆம் ஆண்டு ஆரணி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பின்னிட்டு தான் எனது தந்தை அம்மணியம்மாளிடம் மேற்சொன்ன மூன்று சொத்துக்களை கிரயம் பெற்றார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் கிரயம் பெற்ற மேற்சொன்ன மூன்று சொத்துக்களும் தற்போது வரையிலும் வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல, நான் தான் அனுபவம் செய்து வருகிறேன். எனது தகப்பனார் கிரயம் பெற்ற ஆவணம் இன்று வரையில் நடைமுறைக்கு வராத ஆவணம் என்றும், செயலிழந்த ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்ப்பு செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.

Ending time : 04.00 p.m.

ஒம்/-செ. மகாலட்சுமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.